பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 26 வியாழக்கிழமை 09.05.2024 கதிர் 183

# அரசியல்வாதிகளை காட்டிலும் அதிகாரிகளே மோசடியானோர்

## உதய கம்பன்பில எம்.பி. தாக்கு

அரசியல்வாதிகளைக் காட்டிலும் அரச அதிகாரிகள் மோசடியானவர்கள் என்று நேற்று நாடாளுமன்றத்தில் ஆவேசப்பட்டார் பிவித்துரு ஹெல உறுமய கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில.

இது தொடர்பில் தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் தொடர்பில் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

வவுனியாவில்தமிழ்மக்களுக்குச் சொந்தமான காணியைப் பிடித்து அதில் பள்ளிவாசல் ஒன்றை அமைப்பதற்கு இராஜாங்க அமைச்சர் ஒருவரின் துணையுடன் காய்நகர்த்தப்படுவதை அடுத்து அங்கு பதற்றம் தோன்றியிருக்கிறது.

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதி கூழாங்குளம். இங்கிருந்து போர்க் காலத்தில் தமிழ் மக்கள்இடம்பெயர்ந்தனர். அவர்களில் பலர்இன்னும்மீளக்குடியமரவில்லை. இந்தக் காணிகளை ஆக்கிரமிக்கவே இப்போது இராஜாங்க அமைச்சர் தலைமையில் காயநகர்த்தப்பட்டு வருவதாகக்குற்றஞ்சாட்டப்படுகின்றது.

ஆக்கிரமிப்புசெய்யப்படும்கிராமம் அமைந்துள்ள பிராமணாலங்குளம் கிராமசேவகர் பிரிவானது தொன்று தொட்டு தமிழர்கள் வாழ்ந்த கிராமம் என்கிறார்கள் அங்குள்ள தமிழர்கள். குறித்த பிரிவில் மன்னார் வவுனியா வீதியில் அமைந்துள்ள ஒரு கிராமமே கூழாங்குளமாகும்.

1990க்கு முதல் சுமார் 200க்கும் மேற்பட்ட குடும்பங்களுடன் காணப்பட்ட இக்கிராமம் ☞ 2

# மின்சார கட்டணக் குறைப்பை மே 10க்கு முன் சமர்ப்பிக்குக

## பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

மின் கட்டண குறைப்பு தொடர்பான முன்மொழிவுகளை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுதெரிவித்துள்ளது.

இம்மாதம் முதலாம் திகதிஇந்தமுன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் இலங்கை மின்சார சபை அதற்கு கால அவகாசத்தை கோரியிருந்ததாக ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 10ஆம் திகதி வரை குறித்த முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதோடு குறித்தமுன்மொழிவுகள் கிடைத்ததன் பின்னர் மின் கட்டணங்களை குறைப்பதற்கான ☞ 2

பிரதேச, மாவட்ட அபிவிருத்தி குழுக்கள் இருக்கையில்

# உள்ளாட்சி மட்டத்தில் மற்றொரு ஆலோசனைக் குழு எதற்காக?

## நாடாளுமன்றில் எதிர்க் கட்சித் தலைவர் கேள்வி

பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட மட்டத்தில் பிரதேச அபிவிருத்தி, மாவட்ட அபிவிருத்தி மற்றும் விவசாய குழுக்கள் என பல குழுக்கள் இருக்கும்போது உள்ளூராட்சி மன்ற பிரஜா ஆலோசனைக் குழு என்ற புதிய குழு ஏன் தாபிக்கப்படுகிறது என்று கேள்விஎழுப்பியுள்ளார்எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை (08) நிலையியற் கட்டளை 27(2)ன்கீழ் உள்ளூராட்சி மன்ற பிரஜா ஆலோசனைக் குழுக்களைஅமைத்துஇஒவ்வொரு குழுவிற்கும் 10 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதன் மூலம் பாரியளவில் பணம் விரயம் செய்யப்படவுள்ளதாகத்தெரிவித்து கேள்விஎழுப்பிகுறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாகஅவர்தொடர்ந்து தெரிவித்ததாவது:

பிரதேச செயலகம் மற்றும் மாவட்டமட்டத்தில்பிரதேசஅபிவிருத்தி, மாவட்ட அபிவிருத்தி ☞ 10

# வவுனியாவில் ஒருவர் கைது

## 5 கிலோ கஞ்சாவும் சிக்கியது

வவுனியாவில் 5 கிலோ கிராம் கஞ்சாவுடன் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார் என்று பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியா, புளியங்குளம் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் செவ்வாய்க்கிழமை இரவுதிடீர்சோதனைஒன்றைநடத்திய அதிரடிப்படையினர் கஞ்சாவைக் கைப்பற்றியதுடன் அதை எடுத்துச் சென்றவரையும் கைது செய்தனர். வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரை சோதித்தபோது சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 கிலோ 124 கிராம் உடைய கஞ்சா கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் வவுனியா, செக்கட்டிப்புலவு பகுதியை ☞ 2

# வரும் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பதே சிறந்த முடிவு

## தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கம் தெரிவிப்பு

சிங்கள ஜனநாயகத்தை தமிழர்கள் ஏற்கவில்லை என்பதை உலகிற்கு தெரிவிப்பதற்குவரும்ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பதே சிறந்த முடிவாகும் என்று தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின்உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் சுமார்2500நாட்களாகத்தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழர் தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்சங்கம்இன்றுஏற்பாடு செய்த ஊடகச் சந்திப்பிலேயே சங்கசெயலாளர்கோ. ராஜ்குமார் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் ஒற்றை ஆட்சியை ஆதரிக்கின்ற நபர்களைத் தவிர்த்து, ☞ 10

# ஐக்கிய மக்கள் சக்தி சட்டபூர்வக் கட்சியா?

## வழக்குக்குத தயாராகுங்கள் எனவும் அமைச்சர் காஞ்சனா நேற்று தெரிவிப்பு

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, இலங்கைப் பிரஜை அல்ல என்ற காரணத்தால் அவரது நாடாளுமன்றப் பதவி பறிக்கப்பட்டுள்ளவதை அடுத்து அவரினால் உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள்சக்திமட்டும்சட்டப் பூர்வமானதா? விரைவில் இது ☞ 8

# சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு 10 வருடங்களில் ரூ. 45,000 கோடி நட்டம்

சிறீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் 2014இல் இருந்து 2024 வரையிலான கடந்த பத்து வருடங்களில் நாற்பத்தி ஐந்தாயிரத்து எழுநூற்று தொண்ணூறு கோடி ரூபாவிற்கும் அதிகமான நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடுத்த விசேட அறிவிப்பில் இந்தவிடயம்வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2014இலிருந்து 2015 வரையில் 16,330 கோடி ரூபாயும் 2015இலிருந்து 2016வரையில் 13,084 கோடி ரூபாயும் 2016 இலிருந்து 2017 வரையில் 2800 கோடி ரூபாயும் 2017இலிருந்து 2018 வரையில் 417 கோடி ரூபாயும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

2018இலிருந்து 2019 வரையில் 4413கோடி ரூபாவும் 2020இலிருந்து 2021வரையில் 4970 கோடி ரூபாவும் 2021 இலிருந்து 2022 வரையில் 16358 கோடி ரூபாவும் 2022இலிருந்து 2023 வரையில் 7130 கோடி ரூபாவும் 2023 இலிருந்து 2024வரையில் 1247 கோடி ரூபாவும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

அத்தோடு 2021 முதல்2022வரையான காலப்பகுதியில் சிறீ லங்கன் எயார் லைன்ஸ்மிகப்பெரிய இழப்பாக 16358 கோடி ரூபாய் இழக்கப்பட்டுள்ளது எனவும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

# கிராமிய விவசாய மேம்பாடு இன்றி வறுமையை ஒழிக்கவே முடியாது

## கிராம அலுவலர்கள் நியமன நிகழ்வில் ரணில் தெரிவிப்பு

கிராமிய விவசாயத்தைமேம்படுத்தாமல் கிராமத்தின்வறுமையை ஒழிக்க முடியாது. எனவே விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். ☞ 8

# சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் இரண்டுக்குமாகப் புதிய சட்டம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான புதிய சட்டத்தையும் நாங்கள் உருவாக்கி வருகிறோம். சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம் இரண்டையும் கையாளும் ஒரு சட்டத்தை கொண்டு வர முடிவு செய்துள்ளோம். இதன் ஊடாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை தொடர்ந்து செயற்படும் அதேவேளை, காலநிலை மாற்றத்திற்கான மன்றம் அதில்உள்ளடக்கும் என்று ஜனாதிபதி ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இப்பகுதிகளில் நடந்த ஆயுத மோதல்களின் காரணமாக இடம்பெயர்வுக்குள்ளானது. போரின் பின்னர் இதுவரையில் 30 குடும்பங்களாலேயே சொந்த இடங்களுக்குத்திரும்பமுடிந்துள்ளது. 300க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் தற்போது இந்திய அகதி முகாம்களில் உள்ளனர்என்றும்கூறப்படுகின்றது.

இந்நிலையில்தான் இக்கிராமத்தின் மன்னார் வவுனியா வீதியை அண்டிய பெரும்பாலான நிலப் பகுதிகள் அருகில் உள்ள கிராமசேவகர் பிரிவு மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் உள்ள பொதுக்காணி ஒன்று இராஜாங்க அமைச்சரின் துணையுடன் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு பள்ளிவாசல் கட்டுவதற்குரிய வேலைதிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

இன்றுவரை தமிழ் மக்கள் தவிர்ந்த ஏனைய சகோதர மக்கள் வாழ்ந்திராத இத் தமிழர் கிராமத்தின் பெரும்பாலான காணிகள் அருகில் உள்ள மக்களுக்கு முறையற்ற வகையில் காணி அனுமதிப்பத்திரங்கள், வெளிப்படுத்தல் உறுதிகள் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. மேலும் பலர் அடாத்தாகக் காணிகளைப் பிடித்து வைத்துள்ளனர்.

இந்தக்கிராமத்தைச்சேர்ந்த ஒரு சில குடும்பங்கள் அண்மையில் இந்தியாவில் இருந்து நாடு திரும்பியிருந்தன. ஏனையவர்களும் நாடுதிரும்ப ஆர்வமாக இருப்பதாக அவர்கள் கூறியிருந்தனர். இந்த நிலையில் அவர்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு அபகரிக்கப்படுவது பெரும் சர்ச்சையையும் பதற்றத்தையும்தோற்றுவித்துள்ளது.

எல்லைநிர்ணயம்மூலம்குறித்த கிராமம் முற்றுமுழுதான தமிழர் வட்டாரத்தில்உள்வாங்கப்பட்டிருந்த ஒரு கிராமம் என்று அதிகாரிகளும் கூறுகின்றனர். ஆயினும் கடந்த சில வருடங்களில் முறையற்ற வகையில்அரசியல்வாதிகள்மற்றும் அதிகாரிகளின் பக்கசார்புடைய இனரீதியான நடவடிக்கைகளால் இந்தப் பூ-ர்வீகத்தமிழ்கிராமம்இழக்கப்பட்டு வருவதாகக் கவலையுடன் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆலயம் இருந்த இடத்தில் பள்ளிவாசல்கள் அமைக்கும் நடவடிக்கை எடுப்பது என்பது வேண்டுமென்றேதமிழர் அடையாளத்தை சிதைப்பது போன்றுள்ளது என்கிற முணுமுணுப்புக்களும் கேட்கின்றன. இன்னும் ஒருசில வருடத்தில்இக்கிராமம்அமைந்துள்ள உள்ளுராட்சி வட்டாரமானது தனது தமிழர்பிரதிநித்துவத்தை இழக்கும் என்றும் அங்குள்ள தமிழ் மக்கள் அச்சப்படுகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் ஒரு நடுநிலையான விசாரணை நடைபெற்றுதங்களுடைய நிலமும் வாழ்வும் பாதுகாக்கபடவேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர்.

தமிழ் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும்இதுவிடயத்தில்உரிய, உண்மையான நடவடிக்கைகளை எடுப்பார்களாக என்று அந்த மக்கள் ஏங்கி நிற்கின்றனர்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## அரசியல்வாதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்சாரத் துறை அமைச்சருடன் பேச்சில் ஈடுபட்டுள்ளோம்.மின்சார சபையை மறுசீரமைப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் அரச நிறுவனங்களுக்குச் சுயாதீனம் வழங்குவதை ஏற்க முடியாது.ஏனெனில் அரசியல்வாதிகளைக் காட்டிலும் அரச அதிகாரிகள் மோசடியாவார்களாக உள்ளார்கள். மத்திய வங்கிக்குச் சுயாதீனம் வழங்குவதற்கும் இதுபோன்ற சட்டமே முன்வைக்கப்பட்டது.

மத்திய வங்கி சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்ட போது அதன் பிரிவுகளை ஆராய்ந்து சட்டமூலம் சட்டமாக்கப்பட்டால் மத்திய வங்கி நாட்டு மக்களுக்குப் பொறுப்புகூறுவதை விடுத்து சர்வதேச நிறுவனங்களுக்குப் பொறுப்புக் கூறும் நிலைக்குத் தள்ளப்படும் என்பதை உணர்ந்து சட்ட மூலத்தை உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குப்படுத்தினோம்.72 திருத்தங்களை உயர்நீதிமன்றம் முன்வைத்தது.இதன் பின்னரே மத்திய வங்கி சட்டமூலம் சட்டமாக்கப்பட்டது.

மத்திய வங்கி 2022 ஆம் ஆண்டு374பில்லியன்ரூபா,2023 ஆம் ஆண்டு 114 பில்லியன் ரூபா என்ற அடிப்படையில் நட்டமடைந்துள்ளது.தொடர்ச்சியாக நட்டமடைந்துள்ள நிலையில் சம்பளத்தை அதிகரித்துள்ளது நியாயமானதா? என்று கடந்த திங்கட்கிழமை ஊடக சந்திப்பின் போது கேள்வி எழுப்பியிருந்தேன்.

நான் குறிப்பிட்ட விடயத்துக்குப் பதிலளிக்கும் வகையில் மத்திய வங்கியின் ஆளுநர் நேற்று முன்தினம்ஊடகசந்திப்பைஏற்பாடு செய்து இலாபம் மற்றும் நட்டத்தில் மத்தியவங்கியின்முன்னேற்றத்தை மதிப்பிட முடியாது.ஆகவே சம்பள அதிகரிப்புகுறித்துகருத்துதெரிவித்த நாடாளுமன்றஉறுப்பினரின்கருத்து பயனற்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

நான் குறிப்பிட்ட கருத்துக்குப் பதிலளிக்காமல், மிக மோசமான முறையில் மத்திய வங்கியின் ஆளுநர் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.மத்தியவங்கியின் தற்போதைய பலவீன நிலைமை, சம்பள அதிகரிப்பு தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் என்னுடன் பகிரங்க விவாதத்துக்கு வர வேண்டும்.அப்போது யாருக்குப் பொருளாதாரம் தொடர்பில் புலமை உள்ளது என்பதை நாட்டு மக்கள் தெரிந்து கொள்வார்கள். அவரும் தெரிந்து கொள்வார் என்றார்.

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபரை விசேட அதிரடிப் படையினர் வவுனியா பொலிசாரிடம்ஒப்படைத்துள்ளனர்.

(100)

## சுற்றுச்சூழல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு ஷங்ரிலா அதிசொகுசு விடுதியில் நேற்று ஆரம்பமான இலங்கையின்காலநிலைமாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால்முதன்முறையாக'எங்கள் கிரகத்திற்கும் எமது நாட்டுக்குமான காலநிலை நடவடிக்கை' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது இந்த இலங்கையின் காலநிலை மாற்ற மாநாடு.

உலகளாவிய மற்றும் தேசிய கண்ணோட்டத்துடன் காலநிலை மாற்ற நெருக்கடியின் பல்வேறு அம்சங்களை ஆழமாகப் புரிந்துகொள்வது மற்றும் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளில் காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய இடையூறுகளை ஆராய்வதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

மாநாட்டில் குறைந்த உமிழ்வு மற்றும் காலநிலை - எதிர்ப்பு பொருளாதாரத்திற்கு மாறுவதற்கு செய்ய வேண்டிய கொள்கை மாற்றங்கள் குறித்தும் ஆராயப்படுகின்றது.

மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்ததாவது:

காலநிலைமாற்றத்துக்குஎதிரான அரசின்நடவடிக்கைகுறித்துவர்த்தக சமூகத்துடன் ஆராய்வதற்கான இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதில் நான்மிகவும்மகிழ்ச்சியடைகிறேன்.

நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றது முதல், காலநிலை சவால்களைசமாளிக்கும்திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து வருகிறேன். அதற்காக எனது அலுவலகத்தில் காலநிலை மாற்ற மையம் உருவாக்கப்பட்டு அதற்கான ஆலோசகரும் நியமிக்கப்பட்டார்.

இதுவரை சுற்றுச்சூழலில் மட்டுமே எங்கள் கவனம் இருந்தது. ஆனால் அதில் காலநிலை மாற்றம் வகிக்கும்முக்கியபங்கைநாம்புரிந்து கொள்ள வேண்டும். காலநிலை மாற்றம் மோசமானால் முழு சுற்றுச்சூழலும் சீர்குலைந்துவிடும். எனவே, காலநிலை மாற்றத்தை எவ்வாறு மாற்றியமைப்பது மற்றும் காலநிலை மாற்றத்திற்கு எதிராக எவ்வாறு போராடுவது என்பதில் நாம் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த சில நாட்களாக நாம் எதிர்கொண்ட கடுமையான வெப்பம் எதிர்கால காலநிலை மாற்றத்தின் அறிகுறியாகும். நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே ஜனாதிபதியாக எனது பணியாக இருந்தது. இதுவரை இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதால் அடுத்தகட்ட பணிகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டின் தற்போதைய பொருளாதார முறைமையில் எம்மால் முன்னேற முடியாது. நான் முன்பு பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டது போல், நாம் அதிக போட்டித்தன்மை கொண்ட ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். அதற்கான புதிய சட்டத்தையும் உருவாக்கி இருக்கிறோம். மேலும் பொருளாதார மாற்ற சட்டத்தை அடுத்த வாரம் வர்த்தமானியில் வெளியிட எதிர்பார்க்கிறோம்.

2050ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வு என்ற இலக்கை இலங்கை அடைவதையும் இந்த பொருளாதார மாற்றச் சட்டம் உறுதி செய்கிறது. மேலும் அந்தக் காலப்பகுதிக்கு முன்னர் இலங்கை இந்த இலக்கை அடைய முடியும் என்று நான் நம்புகிறேன்.

இந்நாட்டில் பொருளாதாரக் கொள்கைகளை வகுப்பதில், ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவது மட்டும் நோக்கமல்ல. நிகர பூஜ்ஜிய உமிழ்வு என்ற இலக்கை அடைவதை அடிப்படையாகக் கொண்ட பசுமைப் பொருளாதாரமாக மாற்றுவதிலும் கவனம் செலுத்தியுள்ளோம்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான புதிய சட்டத்தையும் நாங்கள் உருவாக்கி வருகிறோம். சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம் இரண்டையும் கையாளும் ஒரு சட்டத்தை கொண்டு வர முடிவு செய்துள்ளோம். இதன் ஊடாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை தொடர்ந்து செயற்படும் அதேவேளை, காலநிலை மாற்றத்திற்கான மன்றம் அதில் உள்ளடக்கும்.

இந்தச் சட்டத்தை உருவாக்குவதற்கு தற்போதுள்ள பிரித்தானிய காலநிலை மாற்றச் சட்டத்தைப் பின்பற்றுமாறு அதிகாரிகளுக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன். அத்துடன், காலநிலை மாற்றக் குழுவின் ஆலோசனையின் பேரில் செயற்படுவதும் நாடாளுமன்றத்தில் ஒழுங்குவிதிகளை சமர்ப்பிப்பதும் ஆளும் தரப்பினதும் சம்பந்தப்பட்ட விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் பொறுப்பாகும் .

நிதி நிறுவனங்களால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டமாக இருப்பதும் பிரித்தானிய காலநிலை மாற்ற சட்டத்தை பின்பற்ற ஒரு காரணம் எனலாம். எங்களிடம் உள்ள பல்வேறு மாற்றுவழிகளும், எங்கள் பசுமை நிதியியலும், நிச்சயமாக இங்கிலாந்து நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டவை என்பதை நாங்கள் உறுதிசெய்கிறோம். வர்த்தக சபை, பங்குச்சந்தை, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு அனைத்தும் அதற்கேற்ப இதனுடன் தொடர்புபடும்.

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான அதிகசாத்தியக்கூறுகள் உள்ளன. சூரிய சக்தி மற்றும்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# மகாவலியின் ஆக்கிரமிப்பை நிறுத்தக் கோரிப் போராட்டம்

## வடக்கு ஆளுநர் செயலகம் முன்பாக






மகாவலி அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பை நிறுத்தக் கோரி கொக்குதொடுவாய், கொக்கிளாய், கருநாட்டுக்கேணி பிரதேச மக்களினால் நேற்றுக் காலை 10 மணியளவில் வட மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் மகாவலி எனும்பெயரில் தமிழர்களின் பூர்வீக காணிகளைஅபகரிக்காதே, மகாவலி திட்டத்தை எமது மண்ணில் நிறுத்து, எமது வாழ்வாதாரத்தை பறிக்காதே, மகாவலி அபிவிருத்தி முல்லைதீவில் பௌத்த மயமாக்கலுக்கா?, எமக்கு நீதி வேண்டும், மகாவலி திட்டத்தை எமது மண்ணில் நிறுத்து என்ற பதாகைகளைத் தாங்கியவாறு இந்தக் கவனவீர்ப்பு போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது



இதனைத் தொடர்ந்து மகாவலி நில ஆக்கிரமிப்பு தொடர்பாக ஆளுநரின் செயலாளரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஊழியர்களின் போராட்டங்கள் சார்பில் கல்விசாரா அமைப்புகள் வாய் திறக்காதிருப்பது வேதனையே

## தென்கிழக்கு பல்கலை ஊழியர் சங்கத் தலைவர் தெரிவிப்பு



(கே எ ஹமீட்)

ஊழியர்களின் போராட்டங்கள் சார்பில் கல்விசார் அமைப்புக்கள் வாய்திறக்காது இருப்பது கவலையளிக்கிறது. எனத் தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன்.

பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கூட்டாக போராடி, அதன்பயனாக கொளுத்த சம்பள அதிகரிப்புக்களையும் வரப்பிரசாதங்களையும் பெற்றுவிட்டு, கூட்டாக போராடிய ஏனைய ஊழியர்களை நட்டாற்றில் விட்டுவிட்டு,கைவிடப்பட்டவர்களின்நியாயமானகோரிக்கைகள் தொடர்பில் ஒரு வார்த்தையேனும் பேசாது, கல்விசார் அணியினர் வாய்மூடி மௌனிகளாக இருப்பது மிகுந்த வேதனையளிப்பதாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எதிர்பார்க்கும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அதற்காக நீண்டகாலமாக போராடிவரும் நிலையில் அவர்களது போராட்டம்தற்போதுதொடர்போராட்டமாகஉருவெடுத்துள்ளது. குறித்தபோராட்டத்தின் ஏழாம் நாளான இன்று 2024.05.08 ஆம் திகதி தென்கிழக்கு பல்கலைக்கழக முற்றிலில் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகம்மது காமிலின் வழிகாட்டலில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தின் போதே ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் தெரிவித்தார்.

நாங்கள் சொகுசு தேவைகளுக்காக போராடவில்லை. எங்களது போராட்டம் வாழ்வாதாரத்துக்கான போராட்டம். நாட்டில்ஏற்பட்டுள்ளபொருளாதார நிலவரங்களின் காரணமாக எங்களது ஊழியர்கள் தங்களது வாழ்வை கொண்டுசெல்ல மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஒரே நிறுவனத்தில் பணியாற்றும் ஒரு தரப்பினருக்கு சம்பள அதிகரிப்பை வழங்கிவிட்டு, எங்களுக்கு வாக்குறுதி தந்து, அரசு ஏமாற்றி வருகின்றது. எங்களது விடயத்தில் அரசு பாகுபாடாக நடந்துள்ளது. அப்பட்டமான உண்மை என தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக கட்டமைப்பில் பட்டதாரிகளை உருவாக்குவதில் கல்விசாரா ஊழியர்களின் பங்கு என்பது பிரதானமான ஒன்று. இவ்வாறான சூழலில் மாணவர்கள் கூட கருத்து எதனையும் கூறவில்லை. பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளுக்குஒத்துழைக்காது இருப்பதனூடாக அரசுக்கு அழுத்தங்களை மாணவர்களும் கல்விசார் தரப்பினரும் வழங்குவார்கள்எனநாங்கள்எதிர்பார்க்கும்இந்தசந்தர்ப்பத்தில் கல்விசார் தரப்பினர் சூம் தொழினுட்பத்தினூடாக தங்களது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது எங்களது போராட்டத்தை மலினப்படுத்தும் செயல்களில் ஒன்றாகவே நாங்கள் கருதுகிறோம்.

நாங்களும்பல்கலைக்கழகசெயற்பாட்டுக்குபங்களிப்பவர்கள் என்பதை குறித்த தரப்பினர் உணர்ந்துகொள்ள வேண்டும்.



அத்துடன் எங்களது கோரிக்கைகள் தொடர்பில் அரசுக்கு அனைவரும் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

2024.05.07 ஆம் திகதி தலைநகரில் பல்கலைக்கழக ஊழியர்களின் ஒன்றிணைந்த பாரிய போராட்டம் இடம்பெற்றிருந்த நிலையில் இன்றும்

வாக்களிக்கப்பட்ட 107 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு, உறுதியளித்த 25மூ ஆஊயு கொடுப்பனவை வழங்கு என்பனபோன்ற பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வை தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இங்கு; ஒற்றுமையே பலம், சமத்துவமே எம் தேவை, அரசாங்கமே கண்முளித்துப்பார், 8 வருட ஏமாற்றம் இன்னும் தொடருமா?, வேண்டாம் வேண்டாம் பாகுபாடு வேண்டாம், புத்திஜீவிகளை உருவாக்கும் அரச ஊழியர்களாகிய நாங்கள் நடுத்தெருவில் என்பனபோன்ற கோஷங்களும் எழுப்பப்பட்டன.(05)

# அன்று மாகாண சபைத் தேர்தலை நடத்தவிடாமல் தடுத்தவர்களே இன்று அதை கோருவது வேடிக்கை

## மேல் மாகாண ஆளுநர் நசீர் அஹமட் சாட்டை



மாகாண சபைத் தேர்தலை நடத்தக் கூடாது, தேர்தலை பிற்போட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸும்,தமிழர்விடுதலைக்கூட்டணியும் சேர்ந்து தேர்தலை பிற்போடுமாறு வாக்களித்துவிட்டு, இன்று மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோருவது வேடிக்கையாகவுள்ளது என்று வடமேல் மாகாண ஆளுநர் நசீர் அஹமட் தெரிவித்தார்.

அமைச்சர்கள், மற்றும் திணைக்கள தலைவர்கள், நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட வடமேல் மாகாண சபையின் பிரதம செயலாளர்களின் பங்களிப்புடன் வடமேல் மாகாணத்தில் எதிர்கால திட்டங்கள் அபிவிருத்திபற்றி புதிய ஆளுநரின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தற்போதைய தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன அவர்களும் கலந்து கொண்டதுடன் ஆளுநர் நசீர் அஹமட் தொடர்ந்து கருத்து தெரிவிக்கும் போது -

வடமேல் மாகாணத்தில் சுற்றுலாத்துறை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. அதனை மேம்படுத்தவும் வடமேல் மாகாணத்தில் புதிய முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் சுற்றுலாத் துறையை மேம்படுத்த தாம் நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாகவும், எதிர்காலத்தில் குருநாகல் மாவட்டத்திலுள்ள தம்பதெனிய போன்ற பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க உள்ளதாகவும், நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சி அடைந்த போது அதனை தூக்கி நிறுத்திய ஒரே ஒரு தலைவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே என்றும் தெரிவித்தார்.

அத்துடன் மாகாண சபைத் தேர்தலை நடத்தவிடாமல் அதனை பிற்போடுவதற்கு (2017.10.20) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து தேர்தலை பிற்போடுவதற்கு வாக்களித்த பெரும்பாண்மையை ஏற்படுத்தி, தடுத்து அன்று எவ்வாறு மாகாண சபைத் தேர்தலை பிற்போடாமல் இருந்திருந்தால் தான் முதலமைச்சராக இருந்த கால கட்டத்தில் கிழக்கின் அபிவிருத்திக்காக முதலீட்டாளர்கள் கொண்டு வந்த 5 பில்லியன் டொலரை முதலீடு செய்வதற்கு தான் நடவடிக்கை எடுத்திருந்ததாகவும், மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்படாமல் இருந்திருந்தால் தான் இரண்டாவது துடவையாக முதலமைச்சரிடம் தனது கிழக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப் படுத்தியிருப்பதாகவும், அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் சேர்ந்து மாகாண சபைத் தேர்தலை நடத்த விடாமல் அதற்கு எதிராக வாக்களித்து இன்று மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோரிக்கை விடுவது வேடிக்கையாகவே உள்ளது என்றும் கூறினார்.

மேலும் தான் கட்சி, இன, மத பாகுபாடு இன்றி எல்லோருக்கும் தனது சேவையை; தொடர்வதாகவும் அவர் தெரிவித்தார்.(05)

# ரஷ்யா, உக்ரைனில் கூலிப் படைகளாக இலங்கையின் முன்னாள் படையினர்

## கடற்படை தகவல்

முப்படைகளிலும் பணியாற்றி ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களை ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளுக்குச் சுற்றுலா விசா மூலம் அழைத்துச்சென்றுகூலிப்படைகளில் அமர்த்தும் மனிதக் கடத்தல் செயற்பாடு இடம்பெறுகின்றன என இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

அவர்களில்சிலர்யுத்தத்தில்பலத்த காயமடைந்துஆதரவற்றநிலையில் பரிதாபமாகஉயிரிழப்பதாகத்தகவல் வெளியாகியுள்ளது.

இந்த மனித கடத்தல் செயற்பாடு தொடர்பில் ஏதேனும் தகவல் கிடைத்தால் 0117192142 அல்லது 0117192250 என்ற இலங்கை கடற்படைத் தலைமையக தொலைபேசி இலக்கங்களுக்குத் தகவல் வழங்குமாறு இலங்கை கடற்படை கோரிக்கை விடுத்துள்ளது.(05)

# போலி மோதிரங்களை அடகுவைத்து பணம் பெற்ற இருவர் கைதாகினர்

போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி நகைகளை அரச வங்கியில் ஒன்றில் அடகு வைத்து பணம்பெற்ற இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த வங்கியிலிருந்து கிடைக் கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் தனமல்வில பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த இரண்டு நபர்களும் போலி மோதிரங்களை அடகு வைத்து 17 லட்சத்து 9,000 ரூபா பணத்தைப் பெற்றுள்ளனர்.

இவர்கள் பலமுறை பத்து போலி மோதிரங்களை வங்கியில் அடகு வைத்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. (05)

# சமூக பாதுகாப்பு சபை மூலமாக மாணவர்களுக்கு பண உதவிகள்

(ஹஸ்பர் ஏ.எச்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் உள்ள தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமாணவர்களுக்கானமேலதிக கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப் பட்டன.மேற்படி காசோலையை தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி நேற்று (புதன்கிழமை) பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைத்தார். இதில் தி/இ.கி.சாரதா வித்தியாலய மாணவியான டி.சதுர்சிகா , தி/கந்/முள்ளிப்பொத்தானை கனிஷ்ட வித்தியாலய மாணவன் ஆர்.பி.தினேத் கவின் மெத்சர ஆகியவர்களுக்கே இந்த மேலதிக கொடுப்பனவுகள் வழங்கி வைக் கப்பட்டன.

கல்வியை ஊக்கப்படுத்தும் நோக்கில் இலங்கை சமூக பாதுகாப்பு சபை ஓய்வூதிய திட்டம் ஊடாக இதனை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் , சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர் மற்றும் பெற்றார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வறட்டு நியாயங்கள்

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் 2014இல் இருந்து 2024 வரையிலான கடந்த பத்து வருடங்களில் நாற்பத்தி ஐந்தாயிரத்து எழுநூற்று தொண்ணூறு கோடி ரூபாவிற்கும் அதிகமான நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன விடுத்த விசேட அறிவிப்பில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2014இலிருந்து 2015 வரையில் 16,330 கோடி ரூபாயும் 2015இலிருந்து 2016வரையில் 13,084 கோடி ரூபாயும் 2016 இலிருந்து 2017 வரையில் 2800 கோடி ரூபாயும் 2017இலிருந்து 2018 வரையில் 417 கோடி ரூபாயும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

2018இலிருந்து 2019 வரையில் 4413கோடி ரூபாவும் 2020இலிருந்து 2021வரையில் 4970 கோடி ரூபாவும் 2021இலிருந்து 2022வரையில் 16358 கோடி ரூபாவும் 2022இலிருந்து 2023வரையில் 7130 கோடி ரூபாவும் 2023இலிருந்து 2024வரையில் 1247 கோடி ரூபாவும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

அத்தோடு 2021 முதல் 2022 வரையான காலப்பகுதியிலேயே சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு மிகப்பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. 16,358 கோடி ரூபாய் இழக்கப்பட்டுள்ளது.

ஆளும் தரப்பு சிறீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தை விற்க இருக்கின்றது. அதனால் தொடர்ந்தும் அதன் நட்டக் கணக்கைக்காட்டிவருகின்றதுஎன்பதுபுரிந்துகொள்ளக்கூடியதே. இருந்தாலும் தற்போதைய சூழ்நிலையில் சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை வாங்குவதற்கும் யாரும் ஆர்வம் காட்டவில்லை என்கிற யதார்த்தமும் உண்டு. முதலீட்டாளர்களை ஆளும் தரப்பு தேடினாலும் நம்பி முதலிடுவதற்கான ஆட்களைக் கண்டறிய முடியாமல் திணறுகின்றது ஆளும் தரப்பு.

இந்த நிறுவனத்தை திறம்பட இலாபகரமாக நடத்த முடியாமல் போனமைக்குக்காரணம்என்னஎன்பதைக்கண்டறிந்துஅதைச் சரிசெய்வதற்குப் பதிலாக, அல்லது முதலீட்டாளர்கள் முன்வராத நிலையில் நிலமையைச் சரிசெய்வதற்கு முயற்சிப்பதற்குப் பதிலாக உலகில் எங்கும் விமான நிறுவனங்கள் இலாபத்தில் இயங்கவில்லை என்று அமைச்சர் நிமல் சிறீபால டி சில்வா சப்பைக்கட்டுக் கட்ட முயற்சித்திருப்பது அபத்தமானது.

உலகில் எந்த ஒரு விமான நிறுவனமும் லாபம் ஈட்டவில்லை, இது அனைத்து விமான நிறுவனங்களுக்கும் இயல்பான ஒரு சூழ்நிலை என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஏர் இந்தியா, பிஓஏசி மற்றும் சுவிஸ் ஏர்லைன்ஸ் போன்ற பணக்கார நாடுகளில் உள்ள விமான நிறுவனங்கள் லாபம் ஈட்டவில்லை என்றும் சில விற்றுத் தீர்ந்துவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகேவின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், நஷ்டம் காரணமாக எயார் இந்தியா டாடா நிறுவனத்திற்கு விற்றுத் தீர்ந்துவிட்டது என்றும், எமிரேட்ஸ் நிறுவனத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் 2 முதல் 3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் வரை அரசு வழங்கியதாகவும் கூறினார்.

இலங்கை போன்ற சிறிய நாடு அந்த வகையில் விமான சேவையை பராமரிக்கும் நிலையில் இல்லை என்றார். ஆனால் பொருளாதார நெருக்கடி ஏற்படும் வரையில் ஆளும் தரப்புக்கள் அதனை அப்படியேதான் பராமரித்து வந்தன என்பதை அவர் இலகுவாக மறந்துவிட்டார். அதைப் பராமரித்த ஆளும் தரப்புக்களில் அவரும் ஒரு அங்கத்தவராக, அமைச்சராக இருந்துள்ளார். எனினும் அவ்வப்போது அரசியல் நிலமைகளுக்கு ஏற்ப வாய்க்கு வந்ததைக் கதைக்கும் இவர் போன்றவர்களால்தான் எந்தவொரு உருப்படியான காரியங்களும் நடக்காமல் இருக்கின்றன.

பிரச்சினைகள் இருப்பின் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து சரிசெய்வதுதான் தமது கடமை என்பதைப் புரிந்துகொள்ளாது வறட்டு நியாயங்களைப் பேசி நிற்பதால் ஆகப்போவது ஒன்றும் இல்லை. இப்போதும் சரியான முதலீட்டாளர் கிடைக்காத வரையில் சிறீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் வருடாந்தம் தொடர்ந்தும் பெரும் இழப்பையே ஏற்படுத்தி நிற்கப் போகிறது. எனவே அதனைச் சரிசெய்வதற்கான வழிவகைகளை ஆளும் தரப்பு உடனடியாகத் தேடவேண்டும்.

# கொரோனா தடுப்பூசியால் உண்மையில் மாரடைப்பு வருமா?

கு.கணேசன்

‘கொரோனாவுக்கு எதிராக ‘கோவிஷீல்டு’ (Covishield) தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களுக்கு மிக அரிதாக ’குருதி உறைவு’ ஏற்படலாம் என்று அதைத் தயாரித்த ஆஸ்ட்ரா ஜெனெகா நிறுவனம், பிரிட்டனில் தடுப்பூசி தொடர் பாக நடைபெற்றுவரும் வழக்கு ஒன்றில் ஒப்புக் கொண்டுள்ளது.




ஊடகங்களில் பரபரப்பாக உலா வந்த இந்தத் தகவலானது, இந்தத் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் எல்லோருக்கும் குருதி உறைவு உண்டாகி, மாரடைப்பு வந்துவிடுமோ என்கிற தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வளவுக்கும் இது ஏற்கெனவே 2021இல் பல ஆய்வாளர்களால்உறுதிப்படுத்தப்பட்டதகவல்தான். நீதிமன்ற விசாரணையில் இதைத் தெரிவிக்க வேண்டியது இப்போது அவசியமாகியதால் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

### உயிர் காத்த தடுப்பூசி

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் உலகெங்கிலும் லட்சக்கணக்கில் உயிர்கள் இழக்கப்பட்டதைப் பார்த்தும் கேட்டும் கதிகலங்கிப்போனபொதுச்சமூகம்“இதனிடமிருந்துவிடுதலை கிடைக்காதா?”எனஏங்கத்தொடங்கியபோது, வாராது வந்தமாமணிபோல்வந்தது ‘கோவிஷீல்டு’ தடுப்பூசி! இதை பிரிட்டனைச் சேர்ந்த ஆஸ்ட்ரா ஜெனெகா நிறுவனமும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகமும் இணைந்து தயாரித்தன.

இலங்கையிலும் முதல் சுற்றில் இந்தத் தடுப்பூசியே ஏற்றப்பட்டது. வழக்கத்தில், ஒரு நோய்க்கிருமியை அழிப்பதற்கு நம் உடலில் எதிர்ப்பு சக்தி கிடைக்க வேண்டுமானால், அந்தக் கிருமியை வீரியம் இழக்கவைத்து மிகச் சிறிய அளவில்உடலுக்குள்செலுத்தவேண்டும். இதன்படி, கரோனா கிருமியின் கூர்ப்புரதத்தை (Spike protein) அடினோ வைரஸ் மரபணுவில் மாற்றியமைத்து ‘கோவிஷீல்டு’ தடுப்பூசிவழியாகச்செலுத்தினார்கள். அது உலகெங்கிலும் கோடிக்கணக்கானவர்களின் உயிரைக் காப்பாற்றியது.

### பாதுகாப்பு அதிகம்... பாதிப்பு குறைவு!

இங்கு புரிந்துகொள்ள வேண்டிய ஒன்று உள்ளது. கொரோனா வைரஸ் தாக்கியதால் நுரையீரல் பாதிக்கப்பட்டு மூச்சுவிட முடியாமல் இறந்தார்கள் என்று பொதுவாகத்தான் பலரும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

உண்மையில், நுரையீரலில் மட்டுமல்லாமல், பல்வேறு உடல் உறுப்புகளில் சிரை குருதிக்குழாய்களில் (Veins) குருதி உறைவு ஏற்பட்டுத்தான் அவர்கள் உயிரிழந்தார்கள். அதாவது. 10 லட்சம் பேருக்குக் கொரோனா வைரஸ் தாக்கியது என்றால், அவர்களில் ஒன்றரை லட்சம் பேர் (15%) இப்படி குருதி உறையும் பிரச்சினையால் அவதிப்பட்டார்கள் அல்லது உயிரிழந்தார்கள்.

அதேவேளை, 10 லட்சம் பேர் ‘கோவிஷீல்டு’ தடுப்பூசியைச் செலுத்திக்கொண்டார்கள் என்றால், அவர்களில் நான்கு அல்லது ஐந்து பேர்தான் (0.0005%) ரத்தம் உறையும் பிரச்சினையால் அவதிப்பட்டார்கள். ஆக, இந்தத் தடுப்பூசியால் கொரோனாவின் இரும்புப் பிடியிலிருந்து காப்பாற்றப்பட்டவர்கள்தான் அதிகம்; பாதிக்கப்பட்டவர்கள் மிக மிகக் குறைவு.

இலங்கையில் பல லட்சக்கணக்கானவர்களுக்கு ‘கோவிஷீல்டு’ தடுப்பூசி செலுத்தப்பட்டதில், பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டதாகப் புள்ளிவிவரம் எதுவும் இல்லை. இதிலிருந்தே இதன் பாதுகாப்புத் தன்மையைப் புரிந்துகொள்ளலாம்.

இன்னொன்றையும் இங்கு சொல்லவேண்டும். தடுப்பூசியால் ஏற்படும் குருதி உறைவு என்பது தடுப்பூசியின் பக்க விளைவு (Side effect) அல்ல! எந்த வைரஸ் உடலைத் தாக்கும்போது குருதியை உறைய வைத்ததோ, அதே வைரஸின் உடல் பாகம்தான் தடுப்பூசியிலும் இருக்கிறது. எனவே, அவரவர் உடல் தன்மையைப் பொறுத்து, தடுப்பூசியில் இருக்கும் வைரஸ் மிக அரிதாகக் குருதி உறைவை ஏற்படுத்துகிறது.

இது காலங்காலமாக குருதி உறைவை ஏற்படுத்துமா என்று கேட்டால், அதுவும் இல்லை. தடுப்பூசி செலுத்திக்கொண்ட 42 நாள்களுக்குள் இந்தக் குருதி உறைவு ஏற்பட்டுவிடும். அதற்குப் பிறகு அது ஏற்பட வாய்ப்பே இல்லை. தடுப்பூசி செலுத்திக்கொண்டு, மூன்று ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் குருதி உறைவு குறித்த அச்சம் தேவையே இல்லை.

### பிரச்சினை புதிது அல்ல!

பொதுச் சமூகத்துக்குத் தடுப்பூசிகள் பிரச்சினை ஆவது இது முதல்முறையல்ல. நெடுங்காலமாக நாம் பயன்படுத்திக்கொண்டிருக்கும் பல தடுப்பூசிகள் இப்படிப் பிரச்சினை ஆகியுள்ளன. உதாரணமாக, போலியோ சொட்டு மருந்து கொடுத்த பல குழந்தைகளுக்கு அந்த மருந்தின் காரணமாகப் போலியோ வந்திருக்கிறது. உயிர் காக்கும் வெறிநாய்க்கடி தடுப்பூசியால் நரம்புப் பிரச்சினைகள் வந்திருக்கின்றன.

நவீன மருத்துவத்தில் மருந்தானாலும் சரி, தடுப்பூசியானாலும் சரி, எத்தனை பேருக்குப் பயன் கிடைக்கும், எத்தனை பேருக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதைக் கவனித்து, பயன் மிக அதிகமாகவும் பாதிப்பு மிக மிகக் குறைவாகவும் உள்ளவை மட்டுமே நடைமுறைக்கு வருகின்றன. அப்படிப் பாதிப்பு உள்ளவற்றையும் மறுபடி மறுபடி ஆய்வுக்கு உட்படுத்தி, பாதிப்பைக் குறைக்கும் பணியைத்தான் நவீன மருத்துவம் முன்னெடுக்கிறது.

கொரோனாவுக்குப் பிறகு மாரடைப்பு அதிகம் ஏன்? - இப்போதெல்லாம் திடீர் உயிரிழப்பு என்றதும் அநேகருக்கும் கொரோனா தடுப்பூசி மீது சந்தேகம் வருகிறது. மாரடைப்பைத் தூண்டும் நவீன வாழ்க்கைமுறைகளில் கவனம் செலுத்த அவர்கள் தவறுகிறார்கள். உணவுமுறை நவீனமடைந்துள்ளது.

உடற்பயிற்சி குறைந்தேபோனது. உடல்பருமன் அதிகரித்துள்ளது. உறக்கம் தொலைந்துள்ளது. இளம் வயதில் மது, புகை, போதைப் பழக்கங்கள் மிகவும் அதிகரித்திருக்கின்றன. இன்றைய பணிச் சூழலில் எல்லாத் துறைகளிலும் பணி அழுத்தம் அதிகரித்திருக்கிறது. அது மன அழுத்தமாக மாறிவிடுகிறது. குருதி அழுத்தம் எகிறுகிறது. நீரிழிவு வருகிறது. மருத்துவ ஆலோசனை இல்லாமல் ’ஜிம்’ போன்ற கடுமையான உடற்பயிற்சிகளை

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# ‘சமாதானத்துக்கான பாதைகள்’ பெண்களுக்கான திட்டம் ஆரம்பம்

இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மோதல்களை தடுப்பதில் பெண்களின் பொருளாதார வலுவூட்டல் மற்றும் அவர்களின் தலைமைத்துவத்தைவலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஜப்பான் அரசாங்கமும் ஐ.நா. பெண்கள் அமைப்பும் ’சமாதானத்துக்கான பாதைகள்’ என்ற செயற்றிட்டத்தை ஆரம்பித்தனர்.

2018ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு தனது பங்காளர் நாடாக ஜப்பான் அரசாங்கம் உதவி செய்துவரும் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஆதரவளிப்பதே இந்த செயற்றிட்டத்தின் நோக்காகும்.

பெப்ரவரி 2023 இல், ஐ.நா. பாதுகாப்புச்சபையின் தீர்மானம் 1325 (2000)இன் கீழான அதனது சர்வதேச கடப்பாடுகளுக்கிணங்க, இலங்கை டபிள்யுபிஎஸ் தொடர்பான தனது முதலாவது என்ஏபிஐ ஏற்றுக்கொண்டது. இந்தத் திட்டத்தின் விருத்தி, ஐ.நா பெண்கள் அமைப்பின் தொழில்நுட்ப ஆதரவுடனும் ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடனும் இலங்கையின் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சால் முன்னெடுக்கப்பட்டது.

திட்டத்தை வெற்றிகரமாக ஏற்றுக் கொண்டதன்மூலம் அதன் முன்னுரிமைப் பகுதிகளை செயற்படுத்துவதன் மூலம் சமாதானத்துக்கான வலுவான பாதைகளை உருவாக்குவதை இந்த செயற்றிட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் 500 பெண்களுக்கு இயலளவைகட்டியெழுப்பும் ஆதரவை வழங்குதல், பால்நிலை சமத்துவம் மற்றும் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக சமூக மற்றும் வீட்டு மட்டத்தில் சமூக நெறிமுறைகள் மற்றும் நடத்தை மாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றுடன் அவர்களுக்கு முரண்பாட்டுத் தீர்வு, மத்தியஸ்தம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்ப வழிநடத்துவதற்கு அவர்களை சாதகமாக்கல் ஆகியவை உள்ளடங்கும்.

இந்த செயற்றிட்டம், முன்னாள் மோதல்கள் பாதித்த பகுதிகளில் உள்ள 500 பெண்கள் தலைமையிலான நுண்கைத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதோடு, நாட்டின் சமூக-பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் இயலாமையுடைய பெண்கள் உட்பட பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு ஆதரவை வழங்கும்.

’இலங்கையில் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதில் ஐ.நா. பெண்கள் அமைப்பின் நீண்டகால பங்காளராக ஜப்பான் இருந்து வருகிறது. எமது நிகழ்ச்சித் திட்டங்கள் பெண்களின் வாழ்வில் அர்த்தமுள்ள மாற்றத்துக்கு வழிவகுத்துள்ளதுடன், இலங்கைப் பெண்களை மாற்றத்தின் தலைவர்களாக ஆக்குவதற்கு இந்த கூட்டுறவைத் தொடர நாங்கள் எதிர்பார்க்கின்றோம். - என ஐ.நா. பெண்கள் அமைப்பின் இலங்கையின் அலுவலகத் தலைவரான ராமாயா சல்காடோ தெரிவித்தார்.

இந்த செயற்றிட்டம் அனுராதபுரம், மட்டக்களப்பு, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.(05)

# கொரோனா தடுப்பூசியால்.....




4ம் பக்கத் தொடர்ச்சி..........

இளையோர் மேற்கொள்கின்றனர்.

இவ்வளவும் சேர்ந்துதான் திடீர் மாரடைப்பை வரவேற்கின்றன. கொரோனாவுக்குப் பிந்தைய நம் வாழ்க்கைமுறையும் பெரிதும் மாறியுள்ளது. உளவியல் சிக்கல்கள் மேலும் கூடியுள்ளன. இவற்றோடு இப்போது புதிதாக கொரோனாவின் நீண்ட காலப் பாதிப்பும் (Long covid) சேர்ந்துள்ளது.

கொரோனா தாக்குதலுக்குப் பிறகு அநேகரின் இதயத்தில் தசைப் பெருக்கமும் (Myopathy), தசைஅழற்சியும் (Myocarditis) அதிகரித்திருக்கின்றன. கொரோனா ஏற்படுத்திய இவ்வகைப் பாதிப்புதான் திடீர் மாரடைப்புக்குக் காரணமே தவிர, கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டதால் இல்லை. இப்போது விவாதப்பொருள் ஆகியிருக்கும் ‘கோவிஷீல்டு’ தடுப்பூசியைஎடுத்துக்கொண்டால், அது அரிதாக குருதியில் தட்டணுக்களைக் குறைத்து குருதி உறைவை உண்டாக்குகிறது (TTS).

அந்தக் குருதி உறைவு ஏற்படுவது பெரும்பாலும் சிரை குருதிக் குழாய்களில் (Veins) மட்டுமே! தமனிக் குழாய்களில் (Arteries) அவ்வளவாக இல்லை. இந்த வித்தியாசத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். இதன்படி மூளை, நுரையீரல், கால்கள், வயிறு போன்றவற்றில்தான் குருதி உறைவு ஏற்பட வாய்ப்பு உண்டு. இந்தக் குருதி உறைவு இதயத்தில் ஏற்படுவதில்லை. மாரடைப்பு என்பது இதயத் தமனிக் குழாய்களில் ஏற்படும் குருதி உறைவு. ஆகவே, ‘கோவிஷீல்டு’ தடுப்பூசியால் மாரடைப்பு ஏற்படும் என்கிற அச்சத்துக்கு இடமில்லை.

செய்தி ஊடகங்கள் எப்போதும் அறிவியலின் பக்கம் நிற்க வேண்டும். நவீனமருத்துவம் குறித்த சந்தேகங்களும் தவறானதகவல்களும் சமூக ஊடகங்கள் மூலம் வேகமாகப் பரவிவரும் இன்றைய சூழலில், தடுப்பூசிகள் குறித்த அவநம்பிக்கை மக்களிடம் அதிகரித்து வருகிறது. தடுப்பூசியைத் திட்டமிட்டு எதிர்க்கும் கூட்டமும் உலக அளவில் செயல்பட்டுவருகிறது.

அறிவியலுக்குப் புறம்பாகச் செயல்படும் இவர்களுக்குத் தீனிபோடும் விதமாகத் தடுப்பூசி குறித்த தகவல்களைத் தராதீர்கள். பூமியில் அறிவியல் வளர்ச்சி இல்லாமல் மானுட வளர்ச்சி இல்லை. ஆகவே, அறிவியலின் துணையோடு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள். அதுதான் சமூக அறம்.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Cream Caramel
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml
Milk Drink
Pepsi M
Coca Cola Tin

# உலக மகளிர் தினத்தை முன்னிட்டு மூதூரில் இலவச மருத்துவ முகாம்



(ஹஸ்பர் ஏ.எச்)

மூதூர் பிரதேச செயலகம் மற்றும் மூதூர் சமுர்த்தி பிரதேச அமைப்பும் இணைந்து இலவச மருத்துவ முகாம் ஒன்றை நேற்று (புதன்கிழமை) மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி .எம். முபாறக் அவர்களின் தலைமையில் மூதூர் கலாச்சார மண்டபத்தில் நடாத்தியது.

மூதூர் தளவைத்தியசாலை யினுடையவைத்தியர் என். நிப்ராஸ் மற்றும் தாதி உத்தியோகத்தர்களும் இரத்த பரிசோதனைகளும், மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர், மூதூர் பிரதேச சபையினுடைய செயலாளர், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமை முகாமையாளர், கிராம நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அரச அலுவலகங்களில் கடமையாற்றும்



கலந்துகொண்டுவைத்தியமுகாமை நடத்தி இருந்தார்கள். இதன்போது நீரிழிவு, இரத்த அழுத்தம், தொற்றா நோய்கள், கொலஸ்ட்ரோலுக்கான பெண் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (05)

# திருக்கோவில் பிரதேசத்தில் வீடின்றி வாழ்ந்து வந்த மூன்று குடும்பங்களுக்கு காணியுடன் புதிய வீடுகள்

(எஸ்.கார்த்திகேசு)

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் வீடின்றி வாழ்ந்து வந்த மூன்று குடும்பங்களுக்கு காணியுடன் புதிய வீடுகள் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டிவைக்கும் நிகழ்வு திருக்கோவில் மண்டானை கிராமத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் திருக்கோவில் மண்டானை கிராமத்தில் நேற்று இடம்பெற்ற இருந்தது.

இப்புதியவீடுகள்மற்றும்காணிஎன்பனதிருக்கோவில் பிரதேசசெயலாளர்தங்கையாகஜேந்திரனின்ஏற்பாட்டில் கனடா சீடர்ஸ் அமைப்பினரின் நிதிப் பங்களிப்புடன் தலா ஒரு வீட்டுக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான நிதியில் இப் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.நிருபா கிராம சேவை நிருவாக உத்தியோகத்தர் ஏ.கந்தசாமி கிராம சேவை உத்தியோகத்தர் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(05)

# காயங்களுடன் மர்மமான முறையில் இறந்த சிறுத்தையின் சடலம் மீட்பு

காயங்களுடன் மர்மமான முறையில் உயிரிழந்த சிறுத்தையின் சடலம் நேற்று (புதன்கிழமை) ஹற்றன் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது .

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேயிலைத் தோட்டத்தின் மேல் பகுதியிலுள்ள வனப்பகுதியில் இந்த சிறுத்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சிறுத்தையின் வயிற்றிலும் முதுகிலும் பெரிய காயம் ஏற்பட்டுள்ளதாகவும், இருசிறுத்தைகள்சண்டையிட்டதன் காரணமாக இந்த சிறுத்தை உயிரிழந்திருக்கலாம் என நல்லதண்ணி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுத்தையின் சடலம் நல்லதண்ணி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (05)

# நிர்வாக உத்தியோகத்தரின் வீட்டில் பொருள்களைத் திருடிய பெண் கைது

தனியார் நிறுவனமொன்றின் சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தரின் வீட்டில் உள்ள பொருள்களைத் திருடிய இளம்பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை பின்வத்தை பகுதியில் வசிக்கும் நிர்வாக உத்தியோகத்தர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இவர் பின்வத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், நிர்வாக உத்தியோகத்தர் வீட்டிலிருந்து சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடியுள்ளார்.

அத்துடன், சந்தேக நபர் அம்பாந்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடையவர் என்பதுடன் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என தெரியவந்துள்ளது.

இவர் மற்றுமொரு இளைஞனுடன் இணைந்து நிர்வாக உத்தியோகத்தர் வீட்டிற்குள் ஜன்னல் வழியாக நுழைந்து இந்த பொருட்களைத் திருடியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பின்வத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)




காலைக்கதிர்
Kalaikkathir

### இஸ்ரேல் பிரதமரின் தலை கொய்யப்படும்வரை

# கே.எவ்.சி, பீட்ஸா ஹட் என்பவற்றை முஸ்லிம்கள் புறக்கணிக்கவேண்டும்

### மு.கா. பிரதித் தலைவர் ஹரீஸ் எம்.பி. வலியுறுத்து

(நூருல் ஹுதா உமர்)

நெதன்யாகு எனும் கொடுங்கோலனை தண்டிக்க உலக குற்றவியல் நீதிமன்றம் முதுகென்பற்றதாக இருக்கலாம். ஆனால் இமாம் மஹ்தியின் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னால் இந்த நெதன்யாகு எனும் கொடுங்கோலனின் தலையோ, அவரது பிள்ளையின் தலையோ,அல்லதுஅவரதுபேரனின் தலையோ கொய்யப்படும் என்ற உறுதியானநம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதுவரையில் இஸ்ரேலிய இராணுவத்தின் சார்பு நிறுவனங்களான கே.எப்.சி., மேக் டொனல்ட்ஸ், பீட்சா ஹட் போன்ற உணவகங்களை மனிதாபிமானமிக்கவர்களும், இலங்கை முஸ்லிங்களும் பகிஷ்கரிக்க வேண்டும்.

இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது: நெதன்யாகு எனும்கொடுங்கோலனைபாதுகாப்பு சபையும் கட்டுப்படுத்த தவறி, உலக குற்றவியல் நீதிமன்றம் பிடியானை பிறப்பிப்பதை அறிந்து அமெரிக்கா தடுத்து நிறுத்தியுள்ளது. உலக குற்றவியல் நீதிமன்றம் பிடியானை பிறப்பிக்க முதுகென்பற்றவர்களாக இருக்கலாம். ஆனால் நாளை இமாம் மஹ்தி (அலை) வருகின்ற போது இமாம் மஹ்தியின் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னால் இந்த நெதன்யாகு எனும் கொடுங்கோலனின் தலையோ, அவரது பிள்ளையின் தலையோ, அல்லதுஅவரதுபேரனின்தலையோ கொய்யப்படும் என்ற உறுதியான நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது

பாலஸ்தீனில் முஸ்லிங்களை அழித்துக் கொண்டிருக்கும் இஸ்ரேலிய இராணுவத்தின் சார்பு நிறுவனங்களான கே.எப்.சி., மேக் டொனல்ட்ஸ், பீட்சா ஹட் போன்ற உணவகங்களில் நீங்கள் உண்ணும்உணவுகள்இஸ்ரேலிய ஆயுததாரிகளுக்கு பக்கபலமாக இருப்பதுடன்முஸ்லிங்களைகொல்ல பணமனுப்பும் உண்டியல்களாக இந்த நிறுவனங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. முஸ்லிங்கள் எந்தக் காரணத்தை கொண்டும் அங்கு சாப்பிட வேண்டாம் என்றும், பாவச்சுமையை சுமக்க வேண்டாம்என்றும்மன்றாட்டமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நெதன்யாகுஎனும்அகோரனின் தலைமையில் இஸ்ரேல் நாசக்காரர்கள் பாலஸ்தீனில் வாழும் மக்களை கொன்று குவித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த மக்கள் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ள றபா பிரதேசத்தை நோக்கி கொலைகார இஸ்ரேலிய ராணுவத்தை நெதன்யாகு நகர்த்திக்கொண்டிருக்கிறான். மனிதாபிமானத்தை நேசிக்கும் உலகவாழ்மக்கள்இதனைஎண்ணி அச்சப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். றபாபிரதேசத்தில்தஞ்சம்புகுந்துள்ள காஸா அகதிகளின் உயிருக்கு உத்தரவாதமளிக்க முடியாத வகையில் ஐ.நாவும், அவர்களின் பாதுகாப்புசபையும்இருந்துகொண்டிருக்கிறது.

அடுத்த நிமிடம் என்ன செய்யப்போகிறார்கள் என்று தெரியாத நிலையில் நெதன்யாகு எனும் அகோரனையும், அவரது கொடூர இராணுவத்தையும் கட்டுப்படுத்த முடியாத நிலையில் எகிப்திய ஜனாதிபதி நாடகமாடிக் கொண்டிருக்கிறார். றபா பிரதேசத்தில் தஞ்சம் புகுந்துள்ள காஸா மக்களை இஸ்ரேலிய இராணுவம் கொல்ல இலகுவாக அந்த பிரதேசத்தின் எல்லை திறந்து விடப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள மனிதாபிமானமுள்ள மக்கள் இஸ்ரேலிய இராணுவத்தின் ஆயுத கொள்வனவுக்கும், அவர்களின் இராணுவ நடவடிக்கைக்கும் உதவிக்கொண்டிருக்கும் அவர்கள் சார்பு நிறுவனங்களை பகிஷ்கரிக்க வேண்டும்.

பாலஸ்தீனில்நடக்கும்கொடுமைகளை சமாதானத்தை போதிக்கும் நாடுகள், மனித உரிமையை வலியுறுத்தும் நாடுகள் எல்லாம் மௌனமாக இருந்து நெதன்யாகு எனும் கொடுங்கோலனுக்கு லைசன்ஸ்கொடுத்துறபாஅகதிகளை கொல்ல தயாராகின்ற போது உலக நாகரீகங்கள், சர்வதேச சட்டங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். முஸ்லிங்கள் இவ்வாறான விடயங்களை உணர்ந்து இஸ்ரேலுக்கு ஆதரவானவர்களை பகிஷ்கரிக்கும் நோக்கில் அவர்கள் சார்பு உணவ கங்களை பகிஸ்கரியுங்கள் என்றார்.

## சுற்றுச்சூழல்....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

காற்றாலை மின்சாரத்திற்கான இலங்கையின் கொள்ளளவு 30 - 50 ஜிகாவோட் வரையில் காணப்படுகிறது. எங்களிடம் உள்ள இந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை பயன்படுத்தி பெரும் பயனை அடைய எதிர்பார்த்திருக்கிறோம்.

நாட்டில் விவசாயப் பொருளாதாரத்தை உருவாக்கும் வகையில், விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வது என்பது குறித்த உடன்பாட்டை உலகளாவிய சமூகத்தினால் எட்ட முடியாமல் போயிருக்கிறது. காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாட்டில் இலங்கையும் பங்கேற்றது. அங்கு நீண்ட நேரம் பேச்சு நடந்தாலும் இறுதி உடன்பாட்டைஎட்ட முடியவில்லை. அடுத்த இரண்டு சந்திப்புகளில் நாம் ஏதாவது ஒரு உடன்பாட்டுக்கு வர வேண்டும் அல்லது இதைக் கைவிடவேண்டும்.

ஆனால் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான மூன்று அடிப்படை நடவடிக்கைகளை இலங்கை மட்டுமே எடுத்துள்ளது.

இரண்டாவதாக, கிளாஸ்கோவில் நடைபெற்ற மாநாட்டில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள தேவைப்படும் நிதியை வழங்குவதாக உறுதி எடுத்திருந்தோம். ஆனால் சில காரணங்களால் அந்த பணம் கிடைக்கவில்லை. அல்லது அதைச் சேகரித்த வங்கிகள் நிதியை வழங்கவில்லை. ஆனால் எங்களுக்கு இந்த நிதி தேவை. எனவேஅபிவிருத்திஅடைந்துவரும் நாடுகள் இதற்காக போராட வேண்டும். ஒரு பக்கம் போராட வேண்டும். மறுமுனையில் வணிக ரீதியான வளர்ச்சிக்கு தேவையான அனைத்தையும்செய்யவேண்டும்.

இதனாலேயே இலங்கைக்குள் வெப்ப மண்டலம் தொடர்பான விடயங்களை குறிப்பிட்டுக் கூறியிருந்தேன். கார்பனை உறிஞ்சும் திறனை வெப்ப வலயம் அதிகமாகக் கொண்டுள்ளது. அதனால் காலநிலை மாற்றம் குறித்த பல்வேறுவணிகத்திட்டங்களுக்கான சாத்தியமும் வெப்ப வலயத்தில் காணப்படுகிறது.

இந்துசமுத்திரஎல்லைநாடுகளின் சங்கத்தின் ஊடாக மேற்படி விடயம் சார்ந்து இந்து சமுத்திரத்தில் காணப்படும் சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து வருகிறோம். அதனால் வெப்ப வலயம் மற்றும் இந்து சமுத்திரத்திற்குள் மிகப்பெரிய கார்பன் உறிஞ்சும் பகுதியொன்று உருவாகும். அதற்காக இலங்கை முன்நின்றுசெயற்படும் என்பதோடு இதனால் பெரிய மாற்றம் ஏற்படும்.

காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவுவது தொடர்பில் பிராந்திய நாடுகளுடன் பேச்சு நடத்தி வருகிறோம். அதற்குத் தேவையான சட்டங்களையும்இலங்கைகொண்டு வரும். கொத்மலை பகுதியிலிருந்து இதற்காக சுமார் 600 ஏக்கரை ஏற்கனவே ஒதுக்கியிருப்பதோடு, அடுத்த வருடம் கட்டுமானப் பணிகளையும் ஆரம்பிக்க உள்ளோம் என்றார்.

## கிராமிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2100 புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று கிராம அதிகாரிகளாக நியமிக்கப்பட்ட உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். இன்று முதல் நீங்கள் அரச சேவையில் வெற்றிகரமான அங்கமாக மாறியுள்ளீர்கள். இந்த நாட்டின் அனைத்து மக்களின் வாழ்க்கையையும் கட்டியெழுப்ப முயற்சி செய்து வருகிறோம். நாட்டின் அடிப்படை நிர்வாகப் பிரிவானகிராமஅலுவலர்பதவியில் உங்களுக்குப் பெரும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இன்று வீழ்ச்சியடைந்துள்ள இந்த நாட்டின் பொருளாதாரத்தை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கானவேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். நாங்கள் ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு உடன்பாட்டை எட்டியுள்ளதோடு அதிலுள்ள பல நிபந்தனைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போதைய அபிவிருத்தித் திட்டம் கிராமத்தை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான சிறுபோகத்தில் வெற்றிகரமான அறுவடையைப் பெற முடிந்தது. மேலும், 2023 ஆம் ஆண்டின் பெரும் போகத்தில், மீண்டும் வெற்றிகரமான அறுவடையைப் பெற்றோம். இந்த பங்களிப்பின் காரணமாக இன்று நாம் பொருளாதார ரீதியில் வலுவடைந்துள்ளோம்.

இதன்மூலம்இன்று 2100 கிராம உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ள முடிந்தது. நிர்வாகப் பணிகள் மட்டுமின்றி, கிராமப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் பொறுப்பும் உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகபிரதேசசெயலாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் இணைந்து செயற்பட வேண்டிய 4 பிரிவுகளை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். குறைந்த வருமானம் பெறும் மக்களின் முன்னேற்றத்திற்காக ஆளும் தரப்பு அஸ்வெசும திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. சமுர்த்தியைவிட மூன்று மடங்கு அதிக கொடுப்பனவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்தப் பயனாளிகள் குறித்த தகவல்களை கணினிமயமாக்கும் பணி இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும். அதற்கமைய, அடுத்த ஆண்டு முதல் இந்த திட்டத்தை எளிதாகச் செயல்படுத்த முடியும். அதன்படி, கிராமத்திற்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை அதிகரித்து, பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவு செய்துள்ளோம்.

அத்துடன், இந்த மக்களின் வாழ்வாதார வழிகளை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த வருவாய் கிராமத்தின் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும். மேலும், கடந்த புத்தாண்டு காலத்தில் குறைந்த வருமானம்பெறுவோருக்குஇரண்டு மாதங்களுக்கு 10 கிலோ அரிசி வழங்கும்திட்டத்தைஆரம்பித்தோம். இது இம்மக்களுக்கு மேலும் நிவாரணத்தை அளிப்பதுடன், சிறு அரிசிஆலை உரிமையாளர்களிடம் இருந்து இந்த அரிசி கொள்வனவு செய்யப்பட்டதால் அவர்களுக்கும் ஓரளவு நன்மை கிடைத்துள்ளது. கிராமத்தின் வளர்ச்சிக்காக இந்தப் பணி தொடர வேண்டும்.

அத்துடன், மக்களுக்கு இலவச காணி உரிமை வழங்கும் திட்டத்தையும் ஆரம்பித்துள்ளோம். இந்த காணி உரிமையால், அவர்களின்பொருளாதாரத்தில்பெரும் மாற்றம்ஏற்படும். மேலும், விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் கிராமப் பொருளாதாரம் வலுப்பெறுகிறது. முற்காலத்தில் ரஜரட்ட பிரதேசத்தில் விவசாயம் செழிப்பாக இருந்தது. தம்பதெனிய முதல் கண்டி வரையிலான ஈரப்பதம் உள்ள பிரதேசத்தில் கறுவா உள்ளிட்ட வாசனைப் பொருட்கள் பயிரிடப்பட்டு ஏற்றுமதி பொருளாதாரம் காணப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியின் போது தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு என்பன ஏற்றுமதி செய்யப்பட்டன.

நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் அபிவிருத்தி செய்ய விவசாயத் துறையை மேம்படுத்த வேண்டும். எனவே இப்பணிகளை பிரதேசசெயலகமட்டத்தில்ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கமநலசேவை மையங்கள் மட்டத்தில் விவசாய நவீனமயமாக்கல் குழுக்களை நியமித்து விவசாயிகளை திரட்டி தனியார் பங்களிப்புடன் கிராமிய விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தை தற்போது தொடங்கியுள்ளோம். இதற்காக 25 பிரதேசசெயலகங்கள் அடையாளம் காணப்பட்டு ஒவ்வொன்றிற்கும் 25 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த வருடத்திற்குள் இதற்காகப் பயன்படுத்தப்படும் பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை 100 ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிராமிய விவசாயத்தை மேம்படுத்தாமல் கிராமத்தின் வறுமையைஒழிக்கமுடியாது.எனவே விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். தெற்கில் சில பகுதிகள் சுற்றுலாத்துறையால் வளர்ச்சியடைந்துள்ளன. இந்த திட்டங்கள் அனைத்தும் கிராமத்தின் பொருளாதாரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உங்கள் பிரதேசத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த நீங்கள் அனைவரும்இந்தநடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

மேலும், கிராமப்புறக் கல்வி மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். அதற்கு உங்கள் பங்களிப்பும் அவசியம். உறுமய வேலைத் திட்டம் தொடர்பான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் பணியை வினைத்திறனாக்கும் வகையில், பிரதமருடன்கலந்துரையாடிநடமாடும் சேவையை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம். இதன்படி எதிர்வரும்இரண்டுமாதங்களுக்குள் இந்த காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும்நடவடிக்கைகளைப்பூர்த்தி செய்ய எதிர்பார்க்கிறோம்'என்றார்.

## ஐக்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான வழக்கை எதிர்கொள்ளத் தயாராகுங்கள் என்று மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இராஜதந்திரசிறப்புரிமை சட்டத்தின்கீழ் 2348/48ஆம்இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள், பெற்றோலிய உற்பத்தி பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் 2340/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் என்பன மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேமவின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்பைச் சவாலுக்கு உட்படுத்தப் போவதில்லை. ஆனால் தற்போது புதிய பிரச்சினையொன்று எழுந்துள்ளது.

டயனாகமகே இலங்கை குடியுரிமையற்றவர் என்பதால் அவரின் நாடாளுமன்றஉறுப்புரிமைநீக்கப்பட்டுள்ளது. இங்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமைக்கு அவரே கைச்சாத்திட்டுள்ளார். ஆகவே ஐக்கிய மக்கள் சக்தி சட்டப்பூர்வமானதா?என்றபிரச்சினை எழும். அவரேகட்சியை இவர்களிடம் கொடுத்துள்ளார். அவர் அந்தக் கட்சியை பதிவு செய்யும்போது அவர் இலங்கை பிரஜையாக இல்லாமலே இருந்துள்ளார். இந்த நாட்டை சேர்ந்தவர் அல்லாத ஒருவருக்குக் கட்சியைப் பதிவு செய்ய முடியாது.

அத்துடன் 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட வேட்பு மனுவிலும் அவரா? கையெழுத்திட்டார் என்பதும் தெரியாது. அப்படி அவர் கையெழுத்திட்டிருந்தால் அது தொடர்பாகக் கவனம் செலுத்தலாம். எதிரணியின் உறுப்பினர்கள் பலர் நாடாளுமன்றஉணவகத்தில்கதைக்கும் போது மிகவும் குழப்பத்தில் இருப்பது போன்றே இருந்தது என்றார்.

இதன்போது எழுந்த ஐக்கிய மக்கள்சக்திதேசியஅமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க கட்சி பதவிகள் ஏற்கனவே மாற்றியமைக்கப்பட்டுள்ளது இதில் பிரச்சினைகள் கிடையாது என்றார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் உரையாற்றிய அமைச்சர் காஞ்சன விஜேசேகர , அப்படியில்லை, இப்படி இல்லை என்று கூறினாலும் இது நீதிமன்றம் செல்லும் பிரச்சினையாகும். நீதிமன்றத்தில் அதுதொடர்பில்கூறவேண்டிவரும்.

வேட்பு மனுக்களில் யார் கையெழுத்திட்டது என்றும் பரிசோதிக்கவேண்டிவரும். இதனால் விவாதங்களுக்கு நேரத்தைச் செலவிடுவதை விடுத்து, இந்த விடயத்திற்கு முகம்கொடுப்பதற்கு தயாராகுங்கள். உங்களுக்கு இந்த விடயத்தில் ஏதோவொரு பிரச்சினை உள்ளது. அவ்வாறு நடக்கக்கூடாது என்றே பிரார்த்திக்கின்றேன்.

எவ்வாறாயினும் இலங்கை பிரஜை அல்லாத ஒருவர் கட்சியை உருவாக்கியிருந்தால், அவர் அந்தக் கட்சியை உங்களிடம் கொடுத்திருந்தால், வேட்பு மனுவில் கையெழுத்திட்டிருந்தால், அவருக்கும் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கும் இடையே ஏதாவது உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டிருந்தால் பிரச்சினை இருக்கும். இப்போதே சிறந்த சட்டத்தரணி குழுவினரைத் தயாராக வைத்துக்கொள்ளுங்கள். எங்கள் பக்கத்திலிருந்து வந்தவர்களை சட்டத்தரணிகளாக வைத்திருக்க வேண்டாம். அவர்களிடம் சட்ட ஆலோசனைகளைப் பெற்றால் பிரச்சினைகள் தீவிரமடையும் என்றார்.

## மின்சார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி மின்கட்டணங்களை குறைப்பது தொடர்பான விபரங்களை எதிர்வரும் ஜூலை மாதத்தில் அறிவிக்க முடியும் என இலங்கை பொதுபயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்தது.

# மட்டு.மாவட்டத்தில் கப்பம்கோரி கொலை அச்சுறுத்தல்: இராணுவ மேஜருக்கு எதிராகப் பொலிஸில் முறைப்பாடு

கல்முனை இராணுவ முகாமைச்சேர்ந்த இராணுவ மேஜர் ஒருவர் 3 லட்சம் ரூபா பணம் தருமாறு அச்சுறுத்தி மிரட்டிவருவதாக மட்டக்களப்பைச் சேர்ந்த நபரொருவர் திங்கட்கிழமை முறைப்பாடு செய்துள்ளார்; என மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது -

மட்டக்களப்பைச்சேர்ந்தராங்கன்எனஅழைக்கப்படும் சாமித்தம்பி வேலாயுதம் என்பவர் வெளிநாட்டுக்கு அனுப்பும் இடை தரகராக கல்முனையைச் சோந்த ஒருவரிடம் 5 லச்சத்து 70 ஆயிரம் ரூபாவையும் அதனுடன் 5 பேரிடம் பணத்தை வாங்கி அதனை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் ஒருவருக்கு வழங்கியுள்ளார்.

இந்நிலையில் குறித்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் ஏமாற்றி வந்த நிலையில் அவருக்கு எதிராக இடைதரகர் கல்முனையைச்சேர்ந்த நபரின் சாட்சியுடன் மாவட்ட விசேட குற்றப்புலனாய்வுபிரிவிடம் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து வேலைவாய்ப்பு முகவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டு வழக்கு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இந்த பின்னணியில் கல்முனை இராணுவ முகாம் மேஜர் இடைத்தரகரான ரங்கனிடம் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு கல்முனையில் உள்ள நபரிடம் வாங்கிய பணத்தை தன்னிடம் தருமாறும் உடன் 3 லட்சம் ரூபாவை தனது வங்கி கணக்கிற்கு வைப்பிலிடுமாறு கப்பம் கோரியதுடன் பணம் தர மறுத்தால் போதைப் பொருளை வீட்டில் வைத்து மனைவியையும் உன்னையும் தூக்கிகொண்டுசென்று இல்லாமல் செய்வேன், 4ஆம் மாடிக்கு அனுப்புவேன் நான் கொழும்பில் பெரிய பின்னணியைச் சேர்ந்தவன் விளையாடக் கூடாது என அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இதனையடுத்து குறித்த இராணுவ மேஜர் அனுப்பிய வங்கி கணக்கிற்கு இடை தரகரான ரங்கன் 30 ஆயிரம் ரூபாவை கப்பமாக அனுப்பியுள்ளார்.

தொடர்ந்து இராணுவ மேஜர் தொலைபேசி ஊடாக அச்சுறுத்தல் விடுத்து கப்பம் கோரி வருகிறார் எனவும் எனக்கும் எனது மனிவிக்கும் உயிர் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். குறித்த இராணுவ அதிகாரியை பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பாதிக்கப்பட்டவர் மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழுவிடம் இராணுவ மேஜருக்கு எதிராக முறைப்பாடு ஒன்றை செவ்வாய்க்கிழமை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிய லொறி கால்வாயினுள் கவிழ்ந்தது



கொழும்பு - கண்டி பிரதான வீதியில் வரக்காபொல பகுதியில் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று கால்வாயில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக வரக்காபொல பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கண்டியிலிருந்து கொழும்புக்கு எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. லொறியின் சாரதி உறங்கியமையால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்தின்போது லொறி, வீதியில் இருந்த மின்கம்பத்துடன் மோதி அருகிலிருந்த கால்வாயில் வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் காயமடைந்த லொறி சாரதி மற்றும் உதவியாளர் வரக்காபொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# காரைதீவு கடற்கரையோரங்களில் கிடக்கும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றக் கோரிக்கை



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட கடற்கரையோரங்களில் அடைமழை காரணமாக பிளாஸ்டிக் மற்றும் இறந்த தாவரங்களின் கழிவுகள் அதிகளவாக தென்படுவதைக் காண முடிந்தது.

குறிப்பாக அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நீர் வடிந்தோடுவதற்காக தற்காலிகமான கால்வாய்கள் கடலை நோக்கி கடந்த இரு தினங்களுக்கு முன்னர் வெட்டப்பட்ட நிலையில் இவ்வாறான கழிவுகள் அதிகளவாக கடற்கரையில் கரை ஒதுங்கி நிறைந்து காணப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் கரையோர பகுதிகளான காரைதீவு மாளிகைக்காடு உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறான கழிவு அடையாளங்கள் தென்பட்டுள்ளன.

இவ்வாறான கழிவு பரவலானது கரையோர மீனவர்களது மீன்பிடிதொழிலுக்கு பெரும்சிரமங்களைக் கொடுப்பதுடன் வலைகளிலும் சிக்கி வருகின்றன.

எனவே பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தில் உடனடியாக தலையிட வேண்டும் என பாதிக்கப்பட்ட மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.(05)





# நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் சர்வதேச மருத்துவ மாதுகள் தினம்



(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் வைத்தியசாலையின் மருத்துவ மாதுக்களின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை சர்வதேச மருத்துவ மாதுக்கள்தினம்கொண்டாடப்பட்டது.

வைத்தியர்கள், தாதிய மேற்பார்வையாளர்கள், தாதியர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பலரும் வாழ்த்து





வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.பி அப்துல் வாஜித் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் எம்.எஸ்.எம்.பாயிஸ், செய்திகளை பரிமாறிக்கொண்டனர். கல்முனைப் பிராந்திய வைத்திய அதிகாரி றிஸ்வின் ஒன்லைன் மூலமாக தனது வாழ்த்துச் செய்திகளை பரிமாறிக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.(05)

# 12 வயதுச் சிறுமியை துஸ்பிரயோகம் செய்த: குற்றவாளிக்கு 20 வருடங்கள் கடூழியச் சிறை

*12 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு எதிராக இருபது வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்க பலப்பிட்டிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*மேலும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு பத்து லட்சம் ரூபா நட்டஈடும் இருபத்தைந்தாயிரம் ரூபா அபராதமும் செலுத்துமாறு பலப்பிட்டிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*உரகஸ்மன்ஹந்திய பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயது நபரொருவருக்கே இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.*

*பாதிக்கப்பட்ட 12 வயது சிறுமியின் தாய் வெளிநாடு சென்றுள்ள நிலையில் சிறுமி தனது தந்தையின் பராமரிப்பில் வாழ்ந்து வந்துள்ளார்.*

*இந்நிலையில், சிறுமியின் தந்தையின் நண்பரான அயல் வீட்டில் வசிக்கும் நபரொருவர் கடந்த 2011 ஆண்டு சிறுமியின் தந்தை வீட்டில் இல்லாத போது சிறுமியைப் பலமுறை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.*

*இதனையடுத்து சந்தேக நபருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில் சுமார் 13 வருட கால விசாரணையின் பின்னரே பலப்பிட்டிய நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (05)*

# மோட்டார் சைக்கிள் விபத்து; 19 வயது இளைஞர் சாவு

## பொத்துஹெரவில் சம்பவம்

பொத்துஹெர பொலிஸ் பிரிவிற்குற்பட்ட கஹவத்தை, பெம்முல்ல பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளதாக பொத்துஹெர பொலிஸார் தெரிவித்தனர். வதாகட பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயது இளைஞரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பெம்முல்லவிலிருந்து கஹவத்தை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி கின்னோரியா பாலத்திற்கு அருகில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநரும் பின்புறத்தில் அமர்ந்திருந்த இளைஞரும் குருணாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் இளைஞர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் குருணாகல் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# புத்தளம் மாவட்ட கிராம உத்தியோகத்தர் மூன்றாம் நிலை பதவிக்கு 91 பேர் தகுதி

(எம்.எச்.எம் சியாஜ்)

கிராம உத்தியோகத்தர்கள் மூன்றாம் நிலை பதவிக்கான எழுத்து மூல பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் காலண்டு பயிற்சிக்கு புத்தளம் மாவட்டத்தில் இருந்து 91 விண்ணப்பதாரிகள் தகுதி பெற்றுள்ளனர்.

இதன்படி புத்தளம் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களான கற்பிட்டி 03 , புத்தளம் 03 , வண்ணாத்தவில்லு 08 , கருவலகஸ்வெள 09 , நவகத்தேகம 01, முந்தல் 07, மஹகும்புக்கடவெல 01, ஆனமடு 02, பல்லம 01, ஆராச்சிகட்டுவ 07, சிலாபம் 05, மாதம்ப 08, மஹவெள 06, நாத்தாண்டி 13, வென்னப்புவ 13, தங்கொட்டுவ 04 என்ற எண்ணிக்கையில் புத்தளம் மாவட்டத்தில் 91 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய கிராம உத்தியோகத்தர்களாக நாடு முழுவதிலும் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள 1942 பேருக்குமான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (புதன்கிழமை) காலை 10.30 மணிக்கு அலரி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பிரியந்தவின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# கற்பிட்டியில் ஹஜ் பெருநாள் ரேஸ் மூன்றாம் பெருநாள் தின அறிவிப்பு

(எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டியில் எதிர்வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு கே.ஆர்.சீ அமைப்பின் ஒழுங்கமைப்பில் கற்பிட்டி மக்களால் பிரமாண்டமான முறையில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள மோட்டர் குரோஸ் ரேஸ் ஹஜ் பெருநாள் மூன்றாம் நாள் (மூன்றாம் பெருநாள் தினம்) கற்பிட்டி தேத்தாவாடி ரேஸ் தரவையில் நடத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ள பட்டுள்ளதாக கே.ஆர்.சீ. அறிவித்துள்ளது.

அத்தோடு இம்முறை இடம்பெற உள்ள மோட்டர் குரோஸ் போட்டியில் முதலிடம் பெறும் வெற்றியாளருக்கு ஒரு லட்சம் ரொக்க பணம் பரிசாக வழங்கப்படும் எனவும் மோட்டர் சைக்கிள் வீரர்களிடம் நுழைவுக் கட்டணம் அறவிடப்படாது எனவும் போட்டியில் கலந்துகொள்வதற்காக வெளிஇடங்களில் இருந்துவருகைதரும் வீரர்களுக்கான சகல வசதிகளும் செய்து கொடுப்தற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளவது என்ற தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(05)

# பிஜி நாட்டின் உயர் நீதிமன்றத்தில் நீதியரசராக இறக்காமம் அஷ்ஹர்

(வி.ரி.சகாதேவராஜா)

பிஜி நாட்டின் உயர் நீதிமன்றத்தின் நீதியரசராக இலங்கையின் இறக்காமத்தைச் சேர்ந்த மொகமட் அஷ்ஹர் உமர்லெப்பை நீதிபதி, மாநில மாளிகையில் பதவியேற்றார்.

பிஜி நாட்டின் நீதித்துறை மாநில மாளிகையில் உயர் நீதிமன்றத்தின் நீதியரசர் மொஹமட் அஸ்ஹர் உமருலெப்பேயின் பதவியேற்பு விழா புதன்கிழமை இடம் பெற்றது.

பிஜி குடியரசுத் தலைவர், அதிமேதகு ரது வில்லியம் கட்டோனிவேர் அவர்களால், உயர் நீதிமன்றத்தின் தற்காலிக நீதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

அவர், தற்காலிக தலைமை நீதிபதி சலேசி டெமோ மற்றும் தலைமைப் பதிவாளர் டோமாசி பைனிவாலு முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த நியமனத்திற்கு முன்னர், நீதியரசர் மொஹமட் அஸ்ஹர் உமரு லெப்பே, 2009 முதல் ஏப்ரல் 2014 வரை இலங்கையின் பல்வேறு நீதிமன்றங்களில் மாஜிஸ்திரேட் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதியாக பணியாற்றினார்.

ஏப்ரல் 2014 இல் நாடியில் ரெசிடென்ட் மாஜிஸ்திரேட்டாகத் தொடங்கிய அவர், ஏப்ரல் 2017 முதல் லௌடோகா உயர் நீதிமன்றத்தின் மாஸ்டராகவும் பணியாற்றினார். அவர் 2014 இல் ஐக்கிய இராச்சியத்தின் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். 2002 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் எல்.எல்.பி(ஹானர்ஸ்) பட்டம் பெற்றார். 2000 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# மாவடிப்பள்ளி அரபுக் கல்லூரிக்கு முஷாரப் எம்.பி. நிதி ஒதுக்கீடு

(ஏயெஸ் மௌலானா

மாவடிப்பள்ளி மர்க்கஸ் சாஆத் இஸ்லாமிய்யா அரபுக் கல்லூரியின் அபிவிருத்திக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் 07 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த அரபுக் கலாசாலையை மேம்படுத்தும் பொருட்டு கல்லூரியின் அதிபர் மற்றும் நிருவாகத்தினர் விடுத்த வேண்டுகோளை ஏற்று தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து இத்தொகையை அவர் ஒதுக்கீடு செய்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் ஏ.எம். அஸாம் மௌலவி தெரிவித்தார்.

இந்த நிதியின் ஊடாகத் தற்போது குறித்த வேலைத்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (05)

## மருத்துவப் பயிற்சிக்கான பதிவு தேர்வு :

# மருத்துவ சபையின் முடிவிற்கு மாணவர்கள் கடும் எதிர்ப்பு

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடத்தப்பட்ட நீண்ட மற்றும் குறுகிய சத்திர சிகிச்சைகளை அடிப்படையாகக் கொண்ட மருத்துவப் பயிற்சிக்கான பதிவு தேர்வை (ஈ.ஆர்.பி.எம்) இரத்துச் செய்வதற்கான தீர்மானத்தை இலங்கை மருத்துவ சபை எடுத்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்து முறைப்பாடளித்துள்ளனர்.

2004 மே மாதம் முதலாம் திகதி இலங்கை மருத்துவ சபையின் பதிவாளருக்குப் பாதிக்கப்பட்ட மாணவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில், ஏற்கனவே நிறைவடைந்த பரீட்சையை மீண்டும் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளமை அநீதியான செயலாகும் என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வாறாயினும், இலங்கை மருத்துவ சபை உறுப்பினர்களில் பெரும்பான்மையான உறுப்பினர்களுக்கு அவ்வாறான கடிதம் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்றும், இந்த பிரச்சினை குறித்துக் கலந்துரையாடுவதற்கு அவசர கூட்டத்தை நடத்துவதற்கு இலங்கை மருத்துவ சபையின் தலைவரிடம் கோரப்பட்டுள்ளதாக மருத்துவ சபை உறுப்பினர் ஒருவரை மேற்கோள்காட்டி செய்தி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது - கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடத்தப்பட்ட நீண்ட மற்றும் குறுகிய சத்திர சிகிச்சைகளை அடிப்படையாகக் கொண்ட மருத்துவப் பயிற்சிக்கான பதிவு தேர்வில் தோற்றிய மாணவர் ஒருவரால் மொழிபெயர்ப்பு தொடர்பில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இலங்கை மருத்துவ சபை விசாரணையைத் தொடங்கிக் குறித்த மாணவரின் முறைப்பாடு நியாயமானது என ஏற்றுக்கொண்டுள்ளதுடன், குறித்த பரீட்சைக்குத் தோற்றிய 41 மாணவர்களுக்கும் மீண்டும் பரீட்சையை நடத்துமாறு இலங்கை மருத்துவ சபை பரிந்துரைத்துள்ளது.

ஆனால் மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் இலங்கை மருத்துவ சபையின் இந்த தீர்மானம் பாரபட்சமானது எனக் குறிப்பிட்டு கடுமையான எதிர்ப்புகளை வெளியிட்டனர். அதே போன்று சுயாதீன விசாரணைக்கும் வலியுறுத்தப்பட்டது.

எனினும் குறித்த பரீட்சையை மீண்டும் நடத்துவதற்கு இலங்கை மருத்துவ சபையின் தலைவரால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் மாற்றம் ஏற்படாமையால் பாதிக்கப்பட்ட மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் தொடர்ந்து எதிர்ப்புகளைத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# யாழில் மரம் வெட்டியவர் தவறிக் கீழே விழுந்து சாவு

யாழ்ப்பாணம் புத்தூரில் உள்ள ஆலய சூழலில் மரம் வெட்டிக் கொண்டு இருந்தவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

திருநெல்வேலி கலாசாலை வீதியில் வசிக்கும் 61 வயதான ஓய்வுபெற்ற பல்கலைக்கழக உத்தியோகத்தரான முத்து சிவலிங்கம் என்பவரே உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது.

காயமடைந்தவர் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# போதை மாத்திரைகளுடன் ஊடகவியலாளர் கைது

## திருகோணமலையில் சம்பவம்

திருகோணமலை மொறவெள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஔவை நகர் பகுதியில் வைத்து பிரதேச ஊடகவியலாளர் ஒருவரை போதை மாத்திரைகளுடன் கைது செய்துள்ளதாக மொறவெள பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பிரதான வீதி, ரொட்டவெள, மொறவெள எனும் முகவரியை சேர்ந்த வயது 42 பிரதேச செய்தியாளரையே இவ்வாறு கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது இவரிடமிருந்து 30 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையில் உள்ள மருந்தகம் ஒன்றில் கொள்வனவு செய்து விற்பனையில் ஈடுபட்டு வந்தார் எனவும் ஆரம்ப கட்ட விசாரனை மூலமாக தெரியவருகிறது. அத்துடன் ஒரு தொகை போக்குவரத்து ஆவணங்களும் மீட்கப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஊடகவியலாளர் அரச, தனியார் ஊடகங்களில் பிரதேச செய்தியாளராகவும் கடமையாற்றி வருகிறார். கைது செய்யப்பட்ட நபரை மொறவெள நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 20 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை மொறவெள பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## வீடு ஒன்றினுள் இருந்து பெண்ணின் சடலம் மீட்பு

உரகஸ்மன்ஹந்திய பொலிஸ் பிரிவிற்குற்பட்ட களுவலகொட பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக உரகஸ்மன்ஹந்திய பொலிஸார் தெரிவித்தனர். 50 வயதுபெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் குறித்த வீட்டில் உள்ள கட்டிலொன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் இவர் சில நாள்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தனது வீட்டில் தனியாக வசித்துவந்த நிலையில் இவரது கணவர் வேலைக்காக வெளியூர் சென்றிருப்பதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரது சடலம் எல்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உரகஸ்மன்ஹந்திய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## 'தமிழ் விதை' முன்பள்ளி பாட நூல் வெளியீடு

(ஐ.ஏ.காதிர் கான்)

வருங்காலத் தலைவரின் முன் பள்ளியில் தமிழ் மொழி மாணவர்களுக்காக 'தமிழ் விதை' பாடநூல், முதன்முதலாக பாடசாலை அதிபர் லைலா அக்ஷியாவால், கடந்த 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, ஹொரேதுடுவை - முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்போது, வித்தியாலய அதிபர் எஸ்.எச். முத்தலிப் கரங்களால், மாணவர்களில் சிலர் நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

இந்தச் சிறப்பு நூல் வெளியீட்டு நிகழ்வில், முன்பள்ளி அதிபர் லைலா அக்ஷியா, துணையாசிரியர் நஸ்ரா பானு மற்றும் பெற்றோர்கள் பங்கேற்றிருந்தனர்.

மேற்படி நூல், தரம் ஒன்றுக்காக மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கில், தமிழ் மொழியைப் படிப்படியாகவும் இலகுவாகவும் கற்கும் வகையில், சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.(05)

## ஏக்கலயில் உள்ள தொழிற்சாலையில் தீ

ஏக்கல பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த தீவிபத்து செவ்வாய்க்கிழமை மாலை 7 மணியளவில் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

3 தீயணைப்பு வாகனங்கள் மூலம் தீயை முழுமையாகக் கட்டுப்படுத்தியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்தில் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை. ஆனால், தொழிற்சாலையின் உடைமைகள் சேதம் அடைந்துள்ளன.

எவ்வாறாயினும், தீப்பரவலுக் கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என்பதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஜாஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)





JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Toxi App)
DOWNLOAD PASSENGER APP
YOU CAN EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
Google Play
App Store
DOWNLOAD DRIVER APP
JRide Driver
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
WhatsApp
Hotline : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk